2019 ஜூலை 3]

அதிகமாக நிதியைப் பெற்று, செய்துகொண்டிருக்கிறோம். இந்த வருடமும் நிறைய சாலைகளைக் கண்டறிந்து கொடுத்திருக்கிறோம். நபார்டு மூலமாகவும் சாலைகளை அமைக்கிறோம். இன்றைக்குக் குடிநீர்த் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளையெல்லாம் மேற்கொள்ளும்போது, சாலைகள் பழுதடைவது அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைமையை அனுசரித்து, பழுதடைந்த சாலைகள் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

கால்நடை மருத்துவமனை

***16616—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, தொட்டியம் ஒன்றியம், நாகையநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், நாகையநல்லூரில் கால்நடை அலகுகள் 5,000–க்கும் குறைவாக உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை துவங்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3 ஆயிரத்திற்கும்மேல் இருந்தால் முதலில் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும். பின்பு, கால்நடைகளின் அலகுகள் 5 ஆயிரத்திற்குமேல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருந்தால் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து, பலதரப்பு மக்களும் பாராட்டக்கூடிய வகையில் நல்லாட்சி நடத்திவரும் குடிமராமத்து நாயகன்; சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்து, தேசத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கி, எளிமையும், இனிமையும் நிறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், ஆலம் விழுதாய் நின்று, நல்லாட்சிக்கு துணை நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், நடுநிலை தவறாமல் கண்ணியத்தோடு இச்சபையை நடத்திச் செல்லும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், நாகையநல்லூர் ஊராட்சி தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் பெருவாரியாக வசிக்கும் பகுதி. இக்கிராமத்தைச் சுற்றி ஆனைக்கல்பட்டி, கவரப்பட்டி, கல்லூர்பட்டி, ஞானம்பட்டி, கருங்காடு மற்றும் கொங்கம்பட்டி ஆகிய குக்கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தொட்டியத்திற்கும், 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காட்டுப்பட்டூருக்கும், 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேய்க்கநாயக்கன்பட்டி, எண்களத்தூருக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, நாகையநல்லூர் கிராமத்திற்கு ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2019 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், நாகையநல்லூர் கிராமத்திற்கு அருகில் இருக்கின்ற ஆனைக்கல்பட்டி, கரட்டுப்பட்டி, கல்லூர்பட்டி போன்ற குக்கிராமங்களைச் சேர்த்து, கால்நடை அலகுகள் 3 ஆயிரத்திற்கும்மேல் அதாவது, 3,234 கால்நடைகள் உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய நாகையநல்லூர் கிராமத்திற்கு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி தொகுதிக்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், உன்னியூர் கிராமத்திற்குப் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கிராமத்திற்கு கால்நடை பராமரிப்புத்*

துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின், விதிமுறைகளுக்குட்பட்டு அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, கடலூர் ஒன்றியம், ராமாபுரம் ஊராட்சியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுகின்ற நிலையில் பால் உற்பத்தியும் அதிகமாக உள்ளது. அந்தப் பகுதியில் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கடந்த ஆண்டும் கோரிக்கை வைத்தேன். பரிசீலிப்பதாகக் கூறினீர்கள். மீண்டும் இப்போதும் கேட்கிறேன்; பரிசீலிப்பீர்கள் என நம்புகிறேன். அதேபோல, பல்வேறு கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. கால்நடை மருத்துவப் பணியாளர்களை இந்த அரசு புதிதாக நியமிக்குமா என்ற கேள்வியையும் தங்கள் வாயிலாகக் கேட்கிறேன். இந்த ஆண்டு ராமாபுரம் ஊராட்சியில் கால்நடை மருந்தகத்தை அமைத்துத் தருவார் என்ற நம்பிக்கையுடன் இந்தக் கேள்வியைக் கேட்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டு கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். ஒரு கிராமம் இருக்கிறது என்று சொன்னால், முதலிலே அங்கு கால்நடைக் கிளை நிலையம்தான் அமைக்கப்படும். அதற்கு 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்க வேண்டுமென்கின்ற விதி உள்ளது. அதற்கடுத்து, கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும். ஒவ்வொன்றாகத்தான் ஏற்படுத்தப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கிராமத்தில், கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், கண்டிப்பாக அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அங்கே கால்நடைக்

கிளை நிலையம் அமைப்பதற்கு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, கால்நடை மருத்துவர்கள் இல்லை என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து, இன்றைக்கு ஏறத்தாழ 818 கால்நடை மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் காலியாக இருக்கின்ற 150 இடங்களை உடனடியாக நிரப்புவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

வீட்டுமனைப் பட்டா

***26209—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மேட்டு சூரப்பட்டில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், நெற்குன்றம் ஊராட்சி, மதுரா மேட்டு சூரப்பட்டு கிராம புல எண் 79/9, மொத்த விஸ்தீரணம் 0.29.0 ஹெக்டேர், 81/1 மொத்த விஸ்தீரணம் 0.01.89 ஹெக்டேர், 81/12 மொத்த விஸ்தீரணம் 0.01.44 ஹெக்டேர் கிராம நத்தம் வகைப்பாடு கொண்ட நிலத்தில்